21.01.2026.

எம்.சி.10/2024

எ.ம.சா.1 கே.சங்கர், த/பெ.கன்னி

**குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீக கிராமாம் சோரபுத்தூர் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால 9ஆம வகுப்பு வரை படித்துள்ளேன். நான மின்சார வாரியத்தில் லைன் இன்ஷ்பெக்டராக பணிபுரிந்து உடல்நிலை சரியில்லாமல் வருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எந்த வருடம் நான் விருப்ப ஓய்வு பெற்றேன் என்றால் 2024ம் வருடம் விருப்ப ஓய்வு பெற்றேன். ஓய்வு பெரும்போது எனக்கு என்ன வயது என்றால் 54 வயது ஆகும். எனது பிறந்த வருடம் 1968 ஆகும். நான் திருமணத்திற்கு முன்பிருந்தே மின்சார துறையில் வேலை பார்த்து வந்தேன் என்றால சரிதான். எனக்கும மனுதாரருக்கும் எந்த தேதியில் எங்கு திருமணம் நடைபெற்றது என்றால்தேதி ஞாபகம் இல்லை. 1984ம் வருடம் சோரபுத்தூர் கிராமத்தில் திருமணம் நடைபெற்றது. மனுதாரார் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அக்கா முறையாவார். திருமணத்திற்கு பிறகு எங்கு குடித்தனம் நடத்தினோம் என்றால் சோரபுத்தூரிலும் அதன் பின்னிட்டு 2 மாதத்திற்கு பிறகு சென்னை பாளைவாக்கத்தில் குடும்பம் நடத்தினோம். மனுதாரர் படிப்பு அறிவு இல்லாதவர் என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள் ஆவார்கள். முதல மகன் 1989 வருடமும், 2ம் மகன 1990ம வருடம பிறந்தார்கள். நாங்கள சென்னையில வாழ்ந்த காலத்தில் எங்களுக்கிடையே சிறு சிறு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒரு 3 மாதங்கள் நான் ஒரு மீனாட்சி என்ற பெண்ணுடன் பெங்களூரில் குடும்பம் நடத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி மீனாட்சி என்ற பெண்ணை தெரியும் அவரது கணவரையும் எனக்கு தெரியும். அந்த மீனாட்சி என்ற பெண் என்மீது ரூ.10000/-ம் ஏமாற்றி விட்டதாக புகார் கொடுத்தபோது அந்த பணத்தை மனுதாரர்தான் பைசல் செய்தார் என்றால் தவறு சரியல்ல. மேலும் சின்னம்மாள் என்ற பெண்ணுடனும் எனக்கு தொடர்பு இருந்து வந்தது என்றால் சரியல்ல தவறு. அவர் என்னுடன் பணிபுரிந்த நபர் ஆவார். அவர் வீட்டிற்கு செல்வது வழக்கம்தான்.

மேற்படி சின்னம்மாள் மற்றும் மீனாட்சி என்ற பெண்களுடன் எனக்கு தவறான உறவு இருந்து வந்ததால்தான் மனுதாரருக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நானும் மனுதாரரும் எந்த வருடம் முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 1994ம் வருடம் முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்ந்துவந்த நாள்முதல் மனுதாரருக்கு எந்தவொரு ஜீவனாம்ச தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கூலி வேலை செய்து தன்னையும் தன் மகன்களை பராமரித்து வந்தார என்றால சரியல்ல நான தான மகன்களை பராமரித்து வந்தேன். எனது மகன்கள் இருவரும் சோரபுத்தூர் கிராமத்தில்தான் தங்கி படித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

இருவரும் அரசு பள்ளியில்தான் படித்துவந்தார்கள் என்றால் சரிதான். புத்தகச்செலவினை தவிர நோட்டு புத்தகம், பேனா, பென்சில் போன்ற செலவுகளை செய்துவந்தேன். நான் சொல்வதுபோல் எனது மகன்களுக்கு எந்தவொரு செலவுகளையும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மஞ்சளா என்ற பெண்ணை 2வதாக திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான் 1996ம் வருடம் திருமணம் செய்து கொண்டேன். முதல் மனைவியான மனுதாரரிடம் இருந்து விவாகரத்து ஏதும் பெற்றேனா என்றால இதுநாள்வரை பெறவில்லை. பொதுவாக முதல மனைவி உயிருடன் இருக்கும்போது விவாகரத்து பெறாமல் 2வதாக திருமணம் செய்வது சட்டப்படி தவறு என்று தெரியுமா என்றால் தெரியும். மனுதாரரின் சகோதரன்தான் 2வது திருமணம் செய்து வைத்தார். மனுதாரருக்கு நான் 2வது திருமணம் செய்துகொண்ட விஷயம் தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வதுபோல் எனக்கு 2வது திருமணம் நடைபெற்ற விஷயம மனுதாரருக்கு தெரியும் அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 2வது திருமணம நடைபெற்றதை தெரிந்து மனுதாரா சென்னை பாலவாக்கத்திற்கு வந்து என்னிடம் பிரச்சனை செய்தாரா என்றால் திருமணம் நடந்த அன்றே வந்து பிரச்சனை செய்தார் மஞ்சளா என்பவர் கர்பமானதற்கு பிறகுதான் அவரை 2வதாக திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் மஞ்சளா என்பவர் கர்பமானதற்கு பிறகு திருமணம் செய்யவில்லை என்றால் அவரது புகாரின்பேரில் வேலை போய்விடும் என்பதால் அவரை திருமணம் செய்துகொண்டேன் என்றும், அதனால்தான் மனுதாரரிடம் கெஞ்சியதால் மனுதாரர் 2வது திருமணம் குறித்து புகார் ஏதும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சொத்து விவர பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் தாக்கல் செய்ததாக கூறினார். செய்யாரில் நான் குடியிருக்கும் வீடு எனது சொந்தவீடா என்றால் இல்லை அது வாடகை வீடு. நான் நிருபண வாக்குமூலத்தில் மாதம ரூ.5000/. வாடகை செலுத்தி வருவதாக கூறியுள்ளதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரசீது வாங்கும் பழக்கம் இல்லை அதனால் ரசீது தாக்கல செய்யவில்லை. அதேபோல் நிருபண வாக்குமூலத்தில் பஜாஜ் நிறுவனத்தில் மாதம்ரூ.9400/- செலுத்தி வருவதற்கான ரசீது ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எப்போது அந்த நிறுவனத்தில் கடன் தொகை பெற்றேன் என்றால் 3 வருடங்களுக்கு முன்பு ரூ.2/- லட்சம கடன பெற்றேன். அதேபோல் எஸ்.எம்.எப்.ஜி இந்தியா கிரிடிட் கோர்ட் நிறுவனத்தில் எப்போது எவ்வளவு ரூபாய் கடன் பெற்றேன் என்றால் 13 மாதங்களுக்கு முன்பு ரூ.3 /- லட்சம் கடன் பெற்று மகளுக்கு திருமணம் செய்து வைத்தேன். எனது நிருபண வாக்குமூலத்தில் மேற்படி கடன் தொகைகளை நான் வேறொரு நபரிடம் பெற்ற கடன தொகைகளை பைசல் செய்வதற்காக வாங்கினேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான விருப்ப ஓய்வு பெறும்போது பணிகொடை எவ்வளவு தொகை பெற்றேன் என்றால் ரூ.30/- லட்சம் பெற்றேன். மேற்படி தொகை ரூ.30/- லட்சத்தை எந்த ஆண்டு பெற்றேன் என்றால் 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெற்றேன். அதேபோல் நான் மாத ஓய்வு ஊதியமாக எவ்வளவு பெற்று வருகிறேன் என்றால் ரு.33000/-ம் பெற்று வருகிறேன். நான் எனது பணிகொடையாக ரூ.30/-லட்சம் மற்றும் ஓய்வு ஊதியமாக ரூ.33000/- மட்டும்தான் பெற்றதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் பணிகொடையாக ரூ.60/-லட்சத்திற்கு மேலும், ஒய்வு ஊதிய தொகையா ரூ.47,000/- பெற்றதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன்கள் இருவருக்கும் திருமணம் ஆகி தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.